# புராதன பண்பாட்டுச் சின்னங்களில் வெளிப்படும் சமயநெறி : அம்பாறை மாவட்டத்தினை மையப்படுத்திய ஆய்வு

**பேபிசாலினி இராமக்கவுண்டர்,**

உதவி விரிவுரையாளர் (இந்து நாகரிகம்),
மொழித்துறை,
கலை மற்றும் கலாசார பீடம்,
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

*babysaliniramakkavundar@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் இலங்கையில் பல பிரதேசங்களில் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை இரண்டாயிரத்திற்கும் அதிகமானவை. பெருங்கற்காலம் பற்றி தெளிவாக அறிந்து கொள்ளக்கூடிய வரலாற்று மூலங்களாக முக்கியத்துவம் பெறுகின்றன. இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களுள் ஒன்றாக அம்பாறை காணப்படுகின்றது. பண்டைக்காலந்தொட்டு பாரம்பரிய பிரதேசங்களில் முதன்மையானதாக இது திகழ்கின்றது. இலங்கையில் இந்து சமயத்தின் தொன்மையினை அறிந்து கொள்வதற்கு இப்பிராந்தியத்தில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்சான்றுகள் ஆதாரமாக அமைகின்றன. இதுவரை பல ஆய்வுகள் இடம்பெற்று பல்வேறு தொல்பொருள் கண்டுபிடிப்புக்கள் இப்பிராந்தியத்தில் நிகழ்ந்துள்ளன. பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள் குறித்து இலங்கையின் பல பிரதேசங்களில் ஆய்வாளர்களால் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றினைப் பற்றிய அறிக்கைகளும் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். நவீன யுகத்திற்கு முற்பட்ட சமூக வழமைகள் மற்றும் சமய நெறிகள் போன்றவற்றினை அறிந்துகொள்வதற்கு புராதன பண்பாட்டுச் சின்னங்களினை நுட்பமாக ஆராய வேண்டும். இவற்றின் மூலமாக எழுத்து, சமயம், இசை, நடனம், சித்திரம் முதலிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிகளையும் அறிந்துகொள்ள முடிகின்றது. அந்தவகையில் இம்மாவட்டமானது சமூகம் மற்றும் அதோடு தொடர்புடைய வழமைகள் குறித்த நீண்டகால வரலாற்றுப் பின்னனியை கொண்டமைகிறது. அறிவுபூர்வமாக சிந்திக்குமிடத்து புராதன பண்பாட்டுச் சின்னங்கள் பிரதிபலிக்கும் சமய நெறிகள் எத்தகைய பின்னனியைக் கொண்டு வடிவமைக்கப்பட்டன என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாக அமைகின்றது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டமானது ஆய்வுப் பிரதேசமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தினில் கண்டெடுக்கப்பட்ட புராதன பண்பாட்டுச் சின்னங்களில் வெளிப்படுகின்ற சமய நெறிகள் பற்றி எடுத்துரைப்பதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. மேலும் அம்பாறை மாவட்டத்தினில் காணப்படுகின்ற புராதன பண்பாட்டுச் சின்னங்களினை அடையாளம் காணல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாக இமைகின்றது. துணைநோக்கங்களாக அவற்றில் வெளிப்படுத்தப்படும் அக்கால மக்களின் வாழ்வியல் அம்சங்களை எடுத்துரைத்தல். அரசர்கள் சமயங்களின் வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்பினை பற்றி அறிந்து கொள்ளல். வரலாற்று மூலாதாரங்களில் புராதன பண்பாட்டுச் சின்னங்கள் பெறுகின்ற சிறப்பினை ஆய்வுப் பிரதேச மக்களுக்கு புலப்படுத்துவதுடன் புராதன பண்பாட்டுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தினை வலியுறுத்தல் போன்றன காணப்படுகின்றன. கள ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டு ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் வரலாற்றியல் ஆய்வாகவும் விவரண ஆய்வாகவும் பண்புசார் ஆய்வாகவும் அமைகின்றது. அம்பாறை மாவட்டத்தில் ஆய்வுகளின் போது கிடைக்கப்பெற்ற புராதனகால பண்பாட்டுச் சின்னங்கள் குறித்து விபரிப்பதனால் விபரண ஆய்வு ரீதியிலும் அங்கு முற்காலத்தில் நிலவிய சமயநிலை குறித்து வரலாற்றியல் ரீதியில் விளக்குவதனால் வரலாற்றியல் ஆய்வாகவும் அப்பிரதேச மக்களது நடைமுறை வழக்கங்கள் பற்றி எடுத்துரைப்பதனால் பண்புசார் முறைமையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்குப் பயன்பட்ட மூலங்களாக முதலாம்நிலைத் தரவுகளாக நேர்காணல், அவதானம் போன்றவற்றுடன் இரண்டாம் நிலைத்தரவுகளாக இலங்கையில் தொல்பொருட் சின்னங்கள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், காணொளிகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. அண்மைக் காலத்திலேதான் புராதன பண்பாட்டுச் சின்னங்களை அடையாளம் காணும் பணிகள் இடம்பெற்றுள்ளன. அதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்தினில் கண்டெடுக்கப்பட்ட புராதன பண்பாட்டுச் சின்னங்கள் ஊடாக அப்பிரதேசத்தினில் ஆதி காலத்தில் இந்து,

பௌத்த சமய பண்பாட்டு மரபுகள் எங்ஙனம் சிறப்புற்று காணப்பட்டிருந்தன என்பதனை ஆராய்வதாக இவ்வாய்வானது அமைகின்றது.

**திறவுச் சொற்கள்** : புராதன பண்பாட்டுச் சின்னங்கள், அம்பாறை மாவட்டம், இந்து சமயம், சமயநெறி

## 1. ஆய்வு அறிமுகம்

அம்பாறை மாவட்டத்தில் பலவகையான புராதன பண்பாட்டுச் சின்னங்கள் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அளவில் சிறியவையாகத் திகழ்கின்றன. அத்தகைய புராதன பண்பாட்டுச் சின்னங்களில் தமிழர்களிடம் நிலவுகின்ற சமூகப் பிரிவுகளின் பெயர்கள், பிராகிருதமயமான தமிழ்ச் சொற்கள் போன்றன காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில் தொழில் சார் சமூகப்பிரிவுகளைச் சேர்ந்த சமூகக் கட்டமைப்பு, உற்பத்தி முறை, பௌத்த சமயச் செல்வாக்கு முதலிய விடயங்களை அறிந்துகொள்ள முடிகின்றது.

பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள் குறித்து இலங்கையின் பல பிரதேசங்களில் ஆய்வாளர்களால் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றினைப் பற்றிய அறிக்கைகளும் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.நவீன யுகத்திற்கு முற்பட்ட சமூக வழமைகள் மற்றும் சமய நெறிகள் போன்றவற்றினை அறிந்துகொள்வதற்கு புராதன பண்பாட்டுச் சின்னங்களினை நுட்பமாக ஆராய வேண்டும். இவற்றின் மூலமாக எழுத்து, சமயம், இசை, நடனம், சித்திரம் முதலிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிகளையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

பண்டைய காலத்தில் மக்களின் ஈமத்தலங்களில் அமைந்துள்ள கல்லறைகள், ஈமத்தாழிகள், என்பவற்றிலே தமிழ்மொழியில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவை நாகரோடு தொடர்புடையவை. குறிப்பாக வட, கிழக்கு மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் பெருந்தொகையான தமிழ்க்கல்வெட்டுக்கள் உள்ளன.

“அரசாங்க வெளியீடுகளில், 1912ஆம் ஆண்டுக்குப் பின்பு வெளிவந்த சாசனங்களைக் காலவரையறைப்படுத்தி அட்டவணைப்படுத்தி வெளியிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இலங்கையில் இதுவரை எத்தனை தமிழ்ச் சாசனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பதனைத் திட்டவட்டமாக கூறமுடியவில்லை, ஏறக்குறைய 150 தமிழ்ச்சாசனங்கள் உள்ளன என்பது ஒரு கணிப்பீடாகும்.” [1]

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தினிலேதான் முதன் முதலாகத் தமிழ்பிராமிக் கல்வெட்டுக்கள் ஆய்வாளர்களால் அடையாளம் காணப்பட்டன. அந்தவகையில் படுவான் கரையிலும், எழுவான் கரையிலும் வட, தென் பகுதிகளிலும் அத்தகைய கல்வெட்டுக்களை காணமுடிகின்றது. வயல் வெளிகளிலும், மலைகளிலும், காடுகளிலும் அவை பரந்து காணப்படுகின்றன. இவை பற்றிய மேலோட்டமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது இத்தகைய கல்வெட்டுக்கள் மற்றும் புராதன பண்பாட்டுச் சின்னங்கள் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டமை சிறப்பிற்குரியது. அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தினில் கிடைக்கப்பெற்ற புராதன பண்பாட்டுச் சின்னங்களை அடிப்படையாகக் கொண்டு அம்மாவட்டத்து மக்களின் சமயநெறியினை எடுத்துரைப்பதாக இவ்வாய்வானது அமைகின்றது.

## 2. ஆய்வு முறையியல்

கள ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டு ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் வரலாற்றியல் ரீதியான ஆய்வாகவும் விவரண ஆய்வாகவும் பண்புசார் ஆய்வாகவும் இது அமைகின்றது. அம்பாறை மாவட்டத்தில் ஆய்வுகளின் போது கிடைக்கப்பெற்றி புராதனகால பண்பாட்டுச் சின்னங்கள் குறித்து விபரிப்பதனால் விபரண ஆய்வு ரீதியிலும் அங்கு முற்காலத்தில் நிலவிய சமயநிலை குறித்து வரலாற்றியல் ரீதியில் விளக்குவதனால் வரலாற்றியல் ரீதியான ஆய்வாகவும் அப்பிரதேச மக்களது நடைமுறை வழக்கங்கள் பற்றி எடுத்துரைப்பதனால் இது பண்புசார் முறைமையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.1 ஆய்வு மூலங்கள்

*அ. முதலாம் நிலைத் தரவுகள்:*
*நேர்காணல், அவதானம்*

*ஆ. இரண்டாம் நிலைத்தரவுகள்:*
*இலங்கையில் தொல்பொருட் சின்னங்கள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், காணொளிகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.*

### 2.2 இலக்கிய மீளாய்வு





1. பத்மநாதன்,சி.,()பிராகிருத மொழி கல்வெட்டுக்களில் தமிழ் மொழியின் செல்வாக்கு எனும் ஆய்வில் பிராமி வடிவம் பற்றிய விளக்கம், இலங்கையில் கல்வெட்டு சாசனங்களில் பிராமியின் செல்வாக்கு, பிராகிருத மொழியின் செல்வாக்கு, தமிழ் பிராமி எழுத்துக்கள், கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கு துணையாக அமைந்தது.
2. பத்மநாதன்,சி.,(), ''சங்கமன் கண்டியில் நாகர்'' எனும் ஆய்விலிருந்து நாகர் குலத்தின் பண்பாடு, கல்வெட்டுக்கள், தூண்கள் போன்ற விடயங்கள் பற்றி தெளிவாக அறிய முடிந்தமை.
3. பத்மநாதன்,சி.,(), கோகர்ணத்தில் நாகர் அமைத்த ஈஸ்வரம் எனும் ஆய்விலிருந்து திருக்கோணேஸ்வரத்தின் ஆதி வரலாறு, அதன் சிறப்பு குளக்கோட்டன், கஜபாகு மன்னன் திருப்பணிகள் பற்றிய சில குறிப்புக்கள், கற்படிமங்கள் பற்றி அறிந்து கொண்டமை.
4. கோபாலசிங்கம், சீ.,(), கிழக்கிலங்கை வரலாற்று இலக்கியங்கள் எனும் ஆய்விலிருந்து கிழக்கிலங்கை வரலாற்று இலக்கியங்கள், கல்வெட்டுப் பாடல்கள், செப்பேடுகள், ஏனைய சாசனங்கள் பற்றிய தகவல்களினை பெற்றுக் கொண்டமை.

## 3. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

இலங்கையிலே புராதன காலத்தில் வாழ்ந்த தமிழ் மொழி பேசிய மக்கள் தொடர்பான கல்வெட்டுக்களும் அவற்றோடு கூடியுள்ள வேறு பண்பாட்டுச் சின்னங்களும் முதன் முதலாகக் கிழக்கு மாகாணத்தில் அடையாளங் காணப்பட்டன. அவற்றின் ஊடாக புராதன பண்பாட்டுச் சின்னங்கள் பற்றியும் அக்கால மக்களது சமயநெறிகள் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.

### 3.1 சங்கமண் கண்டியிற் கண்டெடுக்கப்பட்ட புராதன பண்பாட்டுச் சின்னங்கள்

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் சங்கமண் கண்டி எனும் பிரதேசம் அமைந்துள்ளது. ஆதிவரலாற்றுக்காலத் தமிழர் குடியிருப்புக்கள் தொடர்பன பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படும் இடங்களிற் சங்கமண் கண்டியும் குறிப்பிடத்தக்க பிரதேசமாக அமைகின்றது. அங்கு இரு வேறு இடங்களிலே தொல்பொருட் சின்னங்கள் மிகையாக காணப்படுகின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவற்றிலொன்று நான்காம் நூற்றாண்டு வரை குடியிருப்புப் பகுதியாக விளங்கியது. அங்குள்ள கல்வெட்டுக்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. அவை தமிழ் பிராமி வரிவடிவங்களில் எழுதப்பட்டுள்ளன. சங்கமன்கண்டியில் பல்வேறு கட்டடங்கள் இருந்தமைக்கான அடையாளங்கள் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

(சங்கமண் கண்டி – மற்றும் குளத்தின் பகுதி)

### 3.1.1 தூண்கள்

சங்கமண் கண்டியில் அதிகமான தூண்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில அடியில் நிலத்தில் புதைந்தவாறு நிறுத்திய நிலையிலும் சில தூண்கள் விழுந்த நிலையிலும் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தூண்களில் ''மணிணாகன்'' எனும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

(சங்கமண் கண்டி – கற்றூண்கள், கல்வெட்டுக்களில் மணிணாகன் பெயர்)

அதாவது இது ஒரு தெய்வத்தினதோ அல்லது அரசனதோ பெயராக இருக்கலாம். இந்தத் தூண்களானவை வேறு பல இடங்களில் காணப்படுவதனைப் போல தலைப்பாகம் அகலமானதாக உள்ளன. தலைப்பாகத்தில் வழமைபோல பாம்பின் வடிவமாகவோ அல்லது மிருகத்தினது தலையோ தெரிகின்ற அமைப்பில் காணப்படுகின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்தத் தூண்களை அடிப்படையாகக் கொண்டு அங்கு நிலவிய சமயநெறி பற்றி நோக்கும்போது அக்கால மக்களின் வழிபாட்டுச் சின்னமாக இத்தூண்கள் காணப்படலாம் என எம்மால் கூறமுடியும். அதாவது இறந்துபோன முன்னோர்களை வழிபடும் வழக்கம் மிகவும் இந்துக்களிடம் மிகவும் தொன்மையானது. உலகம் முழுவதும் இவ்வழக்கம் இருந்துள்ளது என்பதனை ஆய்வாளர்கள் பலரும் பல்வேறு கால கட்டங்களிலும் விளக்கியுள்ளனர்.

சங்க காலத்தில் தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்திற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்நடுகல் வழிபாடு தோன்றியுள்ளமை சிறப்பாகும். நடுகல் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இச்செய்திகளில் அதிகமானவை ஆநிரை மீட்டு இறந்தவரையே குறிப்பனவாக உள்ளன. நடுகற்கள் சிறந்த செயல் செய்தார்க்கும் அமைக்கப்பட்டமையை அவ்வழக்கத்தினது தொடர்ச்சியாகவே கொள்ளலாம். ''பெரும்பாலும் வீரர்களை புதைத்த இடத்தினில் நடுகற்கள் எடுக்கப்பட்டன என்பர்.''[3] ஆகவே இத்தூண்களில் பொறிக்கப்பட்டுள்ள பெயர்கள் அக்கால மக்களினால் தெய்வமாக வழிபடப்பட்ட





தலைவர்களாக இருக்கலாம் எனக் கருதமுடிகின்றது.

''சங்கமண் கண்டி ஆழமான, விரிவான ஆய்வுகளுக்குரிய இடம். ஆதனை அண்மையில் அறிந்து கொண்டதால் ஒரு பாதுகாப்புப் பிரதேசமாகத் தொல்பொருள் திணைக்களம் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தியுள்ளது. இங்கு கட்டடங்கள் பல இருந்தமைக்கான அடையாளங்கள் தெரிகின்றன. அவற்றின் சிதைவுகளான செங்கற்களின் துண்டங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. அவற்றோடு கலவோடுகளும் கூரையோடுகளின் துண்டங்களும் தெரிகின்றன. சில தலைமுறைகளாக ஆட்சிபுரிந்த நாகர்குல வேளிரின் வசிப்பிடங்கள் இங்கு அமைந்திரந்தன எனக் கருதலாம்''.[4]

மேலும் இந்த இடத்தினில் கண்டெடுக்கப்பட்ட தூண்கள் பிறவற்றிலும் மூன்று தலைமுறைக்குரிய நாகர்குல வேளிரின் பட்டப்பெயர்கள் பொறிக்கப்ப்டுள்ளமையும் சிறப்பாகும். இவை பெரும்பாலும் அக்கால மக்களது வழிபாட்டுச் சின்னங்களாகவே இருக்க வேண்டும். எனவே இத்தகைய வழிபாட்டினை வழமையாகக் கொண்டிருந்த அக்கால மக்கள் இந்துக்களாக இருக்கலாம் எனக் கருத முடிகின்றது.

### 3.1.2 ஈமக்கல்லறைகள்

சங்கமண் கண்டியில் ஓரிடத்தில் ஈமக்கல்லறையின் இடிபாடுகள் போன்ற கற்குவியல்கள் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கற்கல் எல்லாவற்றிலும் எழுத்துக்களும் பெயர்களும் அவை அடங்கிய தொடர்களும் காணப்படுகின்றன. கல்லொன்றின் ஒரு வட்டத்திற்குள் ''மணிணாகன்'' என்ற பெயர் காணப்படுகின்றது. அத்துடன் நாகர்கள் பயன்படுத்திய மட்கலங்கள், கூரையோடுகள், கட்டடப்பொருட்கள் போன்றவை எல்லாவற்றிலும் தங்களது பதவிப் பெயர்களை பொறிக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சங்கமண் கண்டியில் கண்டெடுக்கப்பட்ட கலவோடுகள் பற்றி ஆய்வாளர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். ''மூன்று கலவோடுகளில் வேள் ணாகன் மகன் வேள் கண்ணன் என்ற தொடர் காணப்படுகின்றது அத்துடன் நான்காவது கலவோட்டில் வேள் ணாகன் மகன் என்பது மட்டுமே காணப்படுகின்றதுடன் ஐந்தாவது உருப்படியில் வேள் கண்ணன் என்ற பெயர் தெரிகின்றது மேலும் சங்கமண் கண்டியில் காணப்படும் மட்கல ஓடுகளும் துண்டங்களும் ஈமக் கல்லறைகளோடு தொடர்புடையவையாகவும் அவை அனைத்தும் சமகாலத்தவையாகவும் அங்கு பாவனையிலிருந்த மட்கலங்கள் பெருங்கற்கால பண்பாட்டுச் சமூகத்தினர் பயன்படுத்தியவற்றை ஒத்தவை.''[5]

ஈமக்கல்லறைகளை உருவாக்கி வழிபடும் மரபு இந்துக்களுக்கே உரித்தான பண்பாக காணப்படுகின்றது. அதாவது இறந்தவர்களுக்காக இவ்விபாடானாது மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அம்பாறை மாவட்டத்தில் புராதன காலத்தில் இத்தகைய வழிபாடானது மிகுந்த செல்வாக்குக் கொண்டிருந்தமையினை இச்சான்றுகளிக் துணைகொண்டு கூறமுடிகின்றது.

## 3.2 காஞ்சிக்குடிச்சாற்றில் மலையில் காணப்பட்ட புராதன பண்பாட்டுச் சின்னங்கள்

காஞ்சிக்குடிச்சாற்றில் நாகர் மலையினை வெட்டி நான்கு நாகர் கோட்டங்களை அமைத்துள்ளனர். அவர்கள் வணங்கும் தெய்வமான மணிணாகனின் கோட்டங்களாக அவை உருவாக்கப்பட்டுள்ளன. அங்குள்ள சிற்பங்களில் ஒன்று உயரமானதும் ஒடுக்கமான அகலம் கொண்டதுமானதுமான செதுக்கப்பட்டுள்ளது. அது புறத்தோற்றத்தினை அவதானிக்கும்போது முகலிங்கம் போன்ற அமைப்பில் காணப்படுகின்றது. உட்புறமாகச் கற்பனாபூர்வமான மணிணாகனின் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. உச்சியில் மனிதத்தலை வடிவம் காணப்படுகின்றது. அதன் கீழ்ப்பகுதியில் பாம்பிம் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. அது கருமை நிறமான வரிகளையுடைய நாகப்பாம்பின் வடிவமாக காணப்படுகின்றது. மேலும் தலைப்பாத்தின் மேற்பகுதியில் பாம்பொன்றின் தலையினது அமைப்பு முறை வரையப்பட்டுள்ளது. இலிங்கம் போன்ற வடிவத்தினது இடப்பாகத்தில் பாம்பின் வடிவங்கள் காணப்படுகின்றன. அத்துடன் இச்சிற்பங்களில் பல இடங்களில் மணிணாகன் என்னும் பெயர் காணப்படுகின்றது.

இத்தகைய அமைப்பினைக் குறித்து நோக்கும்போது இங்கு நாக வழிபாடானது முற்காலத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. அதாவது இலிங்க வடிவத்துடன் பாம்பின் வடிவமும் இணைந்து காணப்படுகின்றமை தற்கால நாக தம்பிரான் வழிபாட்டினை பிரதிபலிப்பனவாக காணப்படுகின்றன. மேலும் அக்காலத்தில் சிவ வழிபாடு செல்வாக்குப் பெற்று விளங்கியமைக்கு இங்கு காணப்படுகின்ற இலிங்க வடிவத்திலான சிற்பங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். மேலும் சிவ வழிபாட்டுடன் நாக வழிபாடும் இணைந்த வகையில் இப்பிரதேச மக்களது வழிபாட்டு முறையானது காணப்பட்டுள்ளது என்பதனை தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

## 3.3 காரைதீவில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்கள்

இலங்கையில் வேறு எங்கிலும் காணப்படாத மிகவும் புராதனமான அரும்பொருள்கள் காரைதீவில் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டன. அவை நாகர் குலத்தினைச் சேர்ந்தவர்களின் பண்பாட்டுச்சின்னங்களாக திகழ்கின்றன என ஆய்வின் முடிவுகள் எடுத்துரைக்கின்றன. ''கல் உரல்கள்'' என்னும் வகைகளுக்குரியவை. அவை எல்லாவற்றிலும்

*ISBN: 978-955-627-013-6*

தமிழ்ப்பெயர்கள் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அதுவும் இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்ப்பிராமி வடிவங்களில் எழுதப்பட்டுள்ளன.

### 3.3.1 மணிணாகன் சிற்பம்

 

இச்சிற்பமானது இந்துக் கடவுளாகிய கஜலஷ்மியின் வடிவத்தினை ஒத்ததாக காணப்படுகின்றது. அதாவது ஆசணக்கோலமான கடவுட் படிமத்திற்கு இரு பக்கங்களிலும் யானைக்கன்று நிற்கின்ற வடிவில் காணப்படுகின்றது. அதாவது மணிணாகனை நீரால் அபிஷேகம் பண்ணுகின்ற காட்சி வனப்பான கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது. ''மணிணாகன்'' எனும் பெயரானது சிற்பத்தின் எல்லாப் பகுதிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

(காரைதீவு – மணிணாகனை யானைகள் நீரால் அபிஷேகம் பண்ணுகின்ற காட்சி)

அதனடிப்படையில் இறைவழிபாட்டில் அபிஷேகம் செய்கின்ற வழமையானது இந்துக்களது வழிபாட்டு முறைகளில் பிரதானமானதாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அகடகால மக்களின் வழிபாட்டு முறையில் அபிˆகம் செய்கின்ற முறைமை காணப்பட்டதனை இச்சிற்பமானது பறைசாற்றுகின்றது.

### 3.3.2 நாகரின் கல் உரல்கள்



கோயில் வளாகத்தில் சில உரல்கள் கிடைக்கப்பெற்றன. இவ்வுரல்கள் இன்றும் பாவனையில் உள்ளன. கோயிலுக்குத் தேவையான அரிசி இவற்றிலே தான் குற்றப்படுகின்றது. இவற்றில் மணிணாகன் பள்ளியென்று எழுதப்பட்டுள்ளதால் ஆதியில் நாகரின் வழிபாட்டுத் தலமொன்றின் தேவைகளுக்காக இவற்றினை உருவாக்கினார்கள் எனக் கூறமுடிகின்றது.

(காரைதீவு – கல் உரல்கள்)

அவற்றின் வேலைப்பாடு மிகவும் நுட்பமான முறையில் காணப்பட்டது. பெருங்கற்பாளங்களை வலிய இரும்புக் கருவிகளினால் வெட்டி, தேவைக்கேற்ப அவற்றைச் செதுக்கி உரல்களாக உருவாக்கியுள்ளமை அக்கால மக்களின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது. இவை அக்கால மக்களது வழிபாட்டு முறைகள் தற்காலத்திலும் பின்பற்றப்படுகின்றமையினை புலப்படுத்தகின்றது.

### 3.3.3 வில்லை ஏந்திய ஆணின் வடிவம்

காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயத்தின் தலவிருட்சமான வேப்பமரத்தின் அடியில் ஒழு மிகவும் புராதனமான செங்கல்லை வைத்து வழிபடுகின்றனர். அந்தக் கல்லினில் ஒரு கையில் வில்லையும் மறு கையில் அமைபையும் ஏந்திய வண்ணம் ஒரு ஆணின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த வடிவம் பழந்தமிழகத்து நடுகல் வழிபாட்டினையொத்த அமைப்பினை உடையதாக காணப்படுகின்றது.

(காரைதீவு – போர் வீரனின் வடிவம்)

இவ்வடிவம் குறித்து முதுமைத் தொல்லியலாளர்களில் ஒருவரான கலாநிதி சு.இராசகோபால் காரைதீவிலுள்ள செங்கல்லிற் காணப்படும் வடிவமானது போர்வீரனது வடிவமாகவுள்ளது என்ற கருத்தினை கூறுகின்றார். இதிலிருந்து அக்கால மக்களிடம் வீரர்களை வழிபடும் மரபானது பின்பற்றப்பட்டு வந்துள்ளது என்பது புலனாகின்றது. இத்தகைய வழிபாடானது இந்துக்களின் பித்ரு வழிபாட்டினை சான்று பகருகின்றது. அதாவது இறந்து போன முன்னோர்களை நமது தெய்வமாகக் கருதி வழிபடுகின்ற மரபானது இந்துக்களிடம் பண்டைக் காலந்தொட்டு காணப்படுகின்றது. அந்த வகையில் முற்காலத்தில் இப்பிரதேசத்தில் மக்களால் பின்பற்றப்பட்ட சமயநெறியானது இந்து சமயமாகக் காணப்பட்டுள்ளமை சிறப்பாக அமைகின்றது.

### 3.3.4 திருக்கோயில் - தம்பிலுவில் கல்வெட்டு

திருக்கோயிலில் காணப்படும் பெரிய தூண் கல்வெட்டு ஏறக்குறைய 5 அடி உயரமான தூணொன்றில் 38 வரிகள் பொறிக்கப்பட்டுள்ளது. சாசனம் தூணின் இரு பக்கங்களிலும் ஒரு வயிரவர் சூலமும் ஒரு மயிலின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டினில் திரிசூலம் மற்றும் மயிலின் வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளமையினை அடிப்படையாகக் கொண்டு இந்தக்கடவுளாகிய வயிரவர் வழிபாடு மட்டுமல்லாது சிவவிபாடும் இடம்பெற்றுள்ளது எனக் கருத இடமுண்டு. அதாவது சிவன் கையில் தாங்கியுள்ள ஆயுதங்களில் திரிசூலமும்



காணப்படுகின்றமை சிறப்பாகும். அத்துடன் மயிலின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளமையினால் இப்பிரதேச மக்கயளிடையே அக்காலத்தில் முருக வழிபாடும் சிறப்பாக காணப்பட்டுள்ளமையினை தெளிவாக அறிய முடிகின்றது. மேலும் இங்குள்ள இக்கல்வெட்டு சிறிசிங்கபோதி விஜயபாகு தேவரின் ஆண்டைக் குறிப்பிடுகின்றது. இக் கல்வெட்டானது நிலதானம் பற்றியது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

“திருக்கோயிற் சாசனம் கோட்டை காலத்து அரசனாகிய ஆறாம் விஜயபாகுவின் காலத்திற்குரியது என்பது அரசனது பெயர் தமிழ் மயமாக்கம் பெற்றுள்ள விதத்தினாலும் உணரப்படுகின்றது. அரசனை அது விசயவாகு தேவர் என்றே குறிப்பிடுகின்றது. ஆனால் பொலன்னறுவைக் காலத்துச் சாசன மொழிவழக்கில் அரசனது பெயரின் இறுதிநிலை ப3ாகு தேவர் என்றே வரும். கொழும்பிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஆறாம் விஜயபாகுவின் காலத்துக் கல்வெட்டிலும் அரசனுடைய பெயர் திருக்கோயிற் சாசனத்திற் போல விசயவாகு தேவர் என்று எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே இச்சாசனம் ஆறாம் விஜயபாகுவின் (கி.பி.1513 – கி.பி.1521) காலத்திற்குரியது என்பதில் ஐயமில்லை”[6]

*ISBN: 978-955-627-013-6*

இச்சாசனம் ஒரு கோயிலுக்கு வழங்கிய நிலதானம் பற்றிய செய்தியினைக் குறிப்பிடுகின்றது. தானமாக வழங்கப்பட்ட நிலத்தின் பெயரை வோவில் என்றும் வோவில என்றும் மாறுபடுவதாக தொல்லியல் ஆய்வாளர்களாகிய வேலுப்பிள்ளையும் இந்திரபாலாவும் அடையாளங்கண்டுள்ளனர். சாசனங்கள் எழுதப்பட்ட காலத்தினில் மெய்யெழுத்துக்களுக்கும் புள்ளியிடும் வழக்கம் இல்லாததால் நிலத்தின் பெயரை வேர்வில் என்பது வேரவில என எழுதப்பட்டுள்ளதாகக் கருதமுடிகின்றது. நிலம் எங்குள்ளது என்ற குறிப்புக்கள் எதுவும் இதில் குறிப்பிடப்படவில்லை.

மேற்குறிப்பிடப்பட்ட சாசனத்தின் குறிப்புகளின் அடிப்படையில் சமய நெறியினை வளர்ப்பதற்காக மன்னர்கள் ஆலயங்களுக்கு வழங்கிய ஆதரவுகளைப்பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது. அதாவது அக்கால மக்களின் வழிபாட்டிற்காக ஆலயங்களை அமைப்பதற்கு அரசர்கள் பெரும் பங்களிப்பினை ஆற்றியுள்ளமையினை இக்கல்வெட்டுச் செய்தியானது புலப்படுத்துகின்றது.

## 3.4 சித்திர வேலாயுதர் சுவாமி கோயிற் கல்வெட்டு

இக்கல்வெட்டானது திருக்கோயிலிற் காணப்படும் சாசனங்களில் மிகவும் முக்கியமானதாக காணப்படுகின்றது. இது திருக்கோயிலுக்கு வழங்கிய பூமிதானம் பற்றி எடுத்துரைக்கின்றது. சாசனத்தின் பிற்பகுதியிலுள்ள வரிகள் சிதைவடைந்து விட்டதனால் வழங்கப்பட்ட நன்கொடைகள் பற்றிய விபரங்களை தெளிவாக ஆய்வாளர்களால் அறிய முடியவில்லை எனக் கூறுயுள்ளமையினைக் காணமுடிகின்றது.

விஜயபாகு மன்னனது காலப்பகுதியில் அவரது பத்தாவது ஆண்டிலே தை மாதத்தில் வழங்கிய தானம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இச்சாசனத்தில் அரசனுடைய சங்கபோதி என்னும் பட்டப்பெயர்களும் இரண்டு விருதுப் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய பெயர்களினது அடிப்படையில் தானத்தினை வழங்கியவன் ஆறாம் விஜயபாகு என்பதனை உறுதி செய்கின்றன.

சிவஞான சங்கரிகள் என்பது அரசனைப் பற்றிய அடைமொழியாக காணப்படுகின்றது. அதாவது சிவஞானம் என்பது சைவம் பற்றிய ஞானத்தினைக் குறிப்பிடுகின்றது. சங்கரிகள் என்பது சிவனது மறுநாமங்களில் ஒன்றாகிய சங்கரன் என்பதன் மாற்று வடிவமாக இருக்க முடியும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எனினும் சிவஞான சங்கரிகள் எனும் தொடர் குறித்து ஆ. வேலுப்பிள்ளை பின்வருமாறு கூறுகின்றார்.

“இச்சாசனத்தை எழுதியவர்கள் சிவஞான சாகரிகள் என்பதைச் சிவஞானச் சங்கரிகள் என்று பிழையாக எழுதியுள்ளனர். என்றும் கருதலாம். அதற்கு முன்னேஸ்வரம் கல்வெட்டின் இறுதியான செய்யுள் வடிவமாக சமஸ்கிருதப்பகுதி தோரமாக உள்ளது. அதிலே சைவஞான மகோததி (சிவஞானத்தின் பெருங்கடல்) என்று ஆறாம் பராக்கிரமபாகுவைக் குறிப்பிட்டுள்ளனர். இது எவ்வாறாயினும் கோட்டை இராச்சியத்தின் அரசர்கள் இருவர் சைவசமயத்தோடு தொடர்பு படுத்தப்பட்டிருத்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவோர் அம்சமாகும். அவர்களைப் பற்றிய அந்த வர்ணனையும் விருதுப் பெயரின் பாங்கில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது”[7]

சிங்கள ஆவணங்களில் தம்மைப் புத்தபிரானின் வம்சாவழியினர் என்றும் பௌத்த சமயத்தின் காவலர் என்றும் பிரகடனப்படுத்திய கோட்டை கால மன்னர்கள். தமிழ் மொழியில் வழங்கிய ஆவணங்களிலே சைவசமயத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவர்களாக அவதானிக்க முடிகின்றது. அதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் பண்டைக்காலத்திலிருந்து இந்து பௌத்த மக்களுக்கு இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## 3.5 தம்பிப்போடியின் தூண் கல்வெட்டு

இக்கல்வெட்டின் வாசகம் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குரிய வரிவடிவங்களிலும் நான்கு வரிகளிலும் எழுதப்பட்டுள்ளது. “பாலிப்போடி தம்பிப்போடி கொண்டு வந்ண்து நாட்டியதா”[5] என்பதே சாசன வாசகம் எழுத்துக்களின் அமைப்பிலும் சில சொற்களின் அமைப்பிலும்

வழமைக்கு மாறான சில அம்சங்கள் உண்டு. சாசனம் எழுதப்பட்ட தூணின் தலைப்பாகத்திலே திரிசூலம் ஒன்றின் வடிவம் பதிக்கப்பட்டுள்ளது. அது சிவனுடைய படைக்கலமாக கொள்ளப்படுகின்றது. முற்காலங்களில் சமய சின்னங்களை எல்லைக் கற்களில் பொறிப்பது வழக்கம். அந்தவகையில் திரிசூலமானது முற்கால அம்பாறை மாவட்டத்தில் வசிக்கின்ற மக்களது வழிபாட்டுச் சமயச் சின்னமாக திரிசூலம் காணப்பட்டுள்ளமையினை அறிய முடிகின்றது.

## 4. ஆய்வின் முடிவுகள்

தொகுத்து நோக்கும்போது அம்பாறை மாவட்டத்தின் தொன்மை வரலாற்றினை அறிவதற்கு கல்வெட்டுக்களும் அங்கு கிடைக்கப்பெற்ற புராதன பண்பாட்டுச் சின்னங்களும் அக்கால மக்களது சமயநெறியினை தெளிவாக எடுத்துரைக்கின்றன. மேலும் இம்மாவட்டத்தில் பண்டைக்காலத்திலிருந்து இந்து சமயம் சிறப்புற்றிருந்தமையினை அவை சான்று பகருகின்றன. அத்துடன் அக்கால மக்கள் திரிசூலம், மயில், நாகம், ஈமக்கல்லறைகள், வீரக்கற்கள், வீரர்கள் முதலியவற்றினை வழிபட்டமையினை இங்கு கிடைக்கப்பெற்ற புராதனச் சின்னங்கள் மிகத் தெளிவாக எடுத்தியம்புகின்றன. இத்தகைய வழிபாட்டு முறைகள் தமிழர்களுக்கே உரித்தானவையாக இருப்பதனால் அக்காலத்தினில் இம்மாவட்டத்தினில் இந்து சமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதனை தெளிவாகக் கூறமுடியும்.

இவை புராதன பண்பாட்டு முறைமைகளை வெளிப்படுத்துவதற்கான சான்றாக அமைகின்றபோதிலும் சாதாரண மக்களால் அச்சின்னங்களினை முக்கியத்துவத்தினை அறிந்து கொள்ள கொள்ள முடியவில்லை. குறித்த ஆய்வுப்பிரதேசத்தினில் கிடைக்கப்பெற்ற இத்தகைய புராதன பண்பாட்டுச் சின்னங்கள் பற்றி ஆராய்வதன் மூலமாக சமுகத்தின் நிலைப்பாடுகளை இலகுவாக கற்றுக்கொள்ள முடியும். மேலும், அவற்றினை பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அம்பாறை மாவட்டத்தினில் புராதன காலத்தினில் பேணப்பட்ட சமயநெறிகள், அவற்றுக்கிடையிலான தொடர்புகள் மேலும் அத்துடன் நமக்கு முற்பட்ட யுகம் பற்றி அறிந்து கொள்வதற்கு இத்தகைய புராதனச் சான்றுகளை நுட்பமாக ஆராய்தல் அவசியமானது என்பதனால் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது அக்கால மக்களது மொழிப்பயன்பாடு, சமய வழிபாட்டு மரபுகள், அடையாளச்சின்னங்கள் போன்றவற்றினை இனங்காண்பதற்கு இவ்வாய்வானது பெரிதும் துணை செய்யும்.

## 5. அடிக்குறிப்புக்கள்

1. பத்மநாதன்.சி., 2006, ப.347
2. பட்டாபிராமன், து., (1990),கல்வெட்டுக்களில் புலப்படுத்தப்படும் புறப்பொருள் இலக்கணம், 1990, ப. 60
3. மேலது, ப. 77
4. பத்மநாதன், சி., (2016), இலங்கையில் தமிழ் சாசனங்கள், ப.316
5. மேலது, ப.313
6. மேலது, 2013, ப. 315
7. மேலது.,2013, ப. 327

## உசாத்துணைகள்

இந்திரபாலா,கா., ()ஆதி இலங்கையில் இந்துமதம், திருமகள் அச்சகம், சுன்னாகம்.

கமலநாதன், சா.இ., (2005), மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கோபாலசிங்கம், சீ., (), கிழக்கிலங்கை வரலாற்று இலக்கியங்கள், ஆதவன் அச்சகம், மட்டக்களப்பு.

சிற்றம்பலம், சி.க., (1996), ஈழத்து இந்து சமய வரலாறு கி.பி.500 வரை பாகம் - 1, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

சிற்றம்பலம்,சி.க., (1993), யாழ்ப்பாண தொன்மை வலைாறு, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

சுப்பிரமணியன்,நா., (1938), பண்டைத் தமிழ் எழுத்துக்கள், மதராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர்.

நடராசா,க.செ., (1980), வையா பாடல், கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

பத்மநாதன், சி., (1977),ஈழ வரலாற்றுப் பரப்பில் யாழ்ப்பாண வைபவமாலை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

பத்மநாதன், சி., (1994), இலங்கையின் இந்துக் கோயில்கள், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், குமரன் பதிப்பகம், கொழும்பு.

பத்மநாதன்,சி., (2000), இலங்கையில் இந்து கலாசாரம் பகுதி 1, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், குமரன் பதிப்பகம், கொழும்பு.

பத்மநாதன், சி., (2004), ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் புத்தக இல்லம்.

பத்மநாதன்,சி., (2006), இலங்கையில் இந்து சமயம், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், குமரன் பதிப்பகம், கொழும்பு.

பத்மநாதன்,சி., (2006), இலங்கைத் தமிழ்சாசனங்கள (கி.பி.700 – கி.பி.1300), இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், குமரன் பதிப்பகம், கொழும்பு.

பத்மநாதன், சி., (2016), இலங்கைத் தமிழர் வரலாறு – கிழக்கிலங்கையில் நாகரும் தமிழரும் (க.மு.250 – கி.பி.300), இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், குமரன் பதிப்பகம், கொழும்பு.

வடிவேல்,இ., (1993), கோணேசர் கல்வெட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.